# ஆரம்பநிலை - மத்தியதரநிலை I ஏற்றம் பெறல்

சுவிசில் பாடசாலைக்குச் செல்லும் கடமை 11 வருடங்களாகும். கட்டாய பாடசாலை ஆரம்பதரம் (2 வருட பாலர்பாடசாலை/அடிப்படை- அல்லது நுழைவுத்தரம் உட்பட) மற்றும் மத்தியதரநிலை I என்ற கட்டமைப்பைக் கொண்டுள்ளது.
ஆரம்பநிலையிலிருந்து மத்தியதரநிலை I க்கு ஏற்றம் பெற்றுச் செல்லும் முறை குறித்து அநேக பாடசாலைகளில் ஆரம்பப் பாடசாலையின் இறுதி வகுப்பில் ஆசிரியர்கள் அல்லது திணைக்களங்கள் பெற்றோருக்கு அறியத்தருவார்கள்.

## திறமையைக் கொண்டிருத்தல்

ஆரம்பநிலையிலிருந்து மத்தியதரநிலை I க்கு ஏற்றம் பெற்றுச் செல்லும்போது வித்தியாசமான தரங்களுக்குப் பிரித்துவிடுவது, பிள்ளை கொண்டிருக்கும் பாடசாலைத் திறமைகளிலேயே தங்கியிருக்கும். சுவிசில் டொச்மொழி பேசும் பகுதியில் நீண்டகால கிம்நாசியம் என அழைக்கப்படும் ஒருமுறை உள்ளது, இதை ஆரம்பப்பாடசாலையின் பின்னர் உடனடியாகவே ஆரம்பிக்கலாம். இந்த வசதியில் நுழைந்து கொள்வதற்கு அநேக மாணவ/மாணவிகள் இதற்காகத் தயார்படுத்தும் வகுப்புகளில் பங்கேற்றுக் கொள்வார்கள், ஏனென்றால் இதில் சேர்வதற்காக ஒரு பரீட்சையில் தோற்ற வேண்டியிருக்கும். சில நகரங்களில் இந்த வகுப்புகள் பாடசாலை நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்படும், ஏனைய நகரங்களில் கட்டணம் செலுத்தும் தனியார் வகுப்புகள் உள்ளன.

## உதவிகள்

உங்கள் பிள்ளையின் வகுப்பு ஆசிரியரே நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முதல் நபர் என்பதுடன் நகருக்குள்ளே மேலதிகமாக உள்ள உதவி வசதிகள் குறித்து அவர் அறியத்தருவார்.

உங்கள் கலாச்சார வட்டத்தில் உள்ள ஒரு அமைப்பும் உதவிசெய்யலாம். குடிவரவாளர்களுக்கான இணையத்தளம் அரசியல் மற்றும் மத சார்பற்ற இலாப-நோக்கற்ற அமைப்பாகும், அதன் இணையத்தளமான www.migraweb.ch இல் பல வித்தியாசமான மொழிகளிலும் (அத்துடன் பல்வேறு மேலதிக உபயோகமான தகவல்களையும்) அதேவேளை வித்தியாசமான வெளிநாட்டு அமைப்புகளின் தொடர்பு முகவரிகளும் பட்டியலிடப்பட்டுள்ளது.